**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
கேகாலை கல்வி வலயம்

வாராந்தப் பாடசாலை - மூன்றாம் தவணை

**வாரம் - 2** **தரம் - 11**

**தமிழ் மொழி - TAMIL**

1. கிருட்டினன் தூது என்ற பாடப்பரப்பில் இடம்பெறும் பின்வரும் செய்யுட் பகுதிகளை படித்து அதன் கீழ் வினவப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக.

1) முந்து ஊர் வெம் பணிக் கொடியோன் மூதூரில்
நுடந்து உழவர் முன்றில்தோறும்
நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு
நாடு ஒன்றும் நல்கான் ஆகில்
ஐந்து ஊர் வேண்டு அவை இல் எனில் ஐந்து இலம் வேண்டு
ஆவை மறுத்தால் அடு போர் வேண்டு
சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்
மருப்பு ஒசித்த செங்கண் மாலே.

i) துரியோதனனிடம் எவற்றை தூதாக வேண்டும்படி குறிப்பிடப்படுகின்றது?

ii) சிந்தூரம், சிந்துரம் எனப்படுபவற்றை தெளிவுபடுத்துக.

2) மூத்தோன் மற்று இவை உரைப்ப இளையோன்
வெஞ்சினம் மனத்திலே மூளமூள
நாத் தோம் இல் உரை பதறக் கதுமென உற்று
எழுந்து இறைஞ்சி ஞாலம் எல்லாம்
பூத்தோனே பூந்தவிசில் பூவை புணர்
மணி மார் பா புன்மை யாவும்
தீர் த்தோனே ஊனம் இலான் மானம் இலாது
உரைப்பதற்கு என் செய்வது என்றான்.

i) வீமனின் சினம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

ii) கிருட்டினன் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?

**இஸ்லாம் - ISLAM**

(இவற்றிற்குரிய விடைகள் பக்கம் 113 -119 வரை உள்ளன)

1. அரேபியர்கள் இலங்கையுடன் வணிகத் தொடர்புகளைப் பேணி வந்தமைக்கு ஏதுவான காரணிகள யாவை? (2 புள்ளிகள்)

2. இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியமை தொடர்பாக குறிப்பிடும் நூல்களையும் அவற்றைத் தொகுத்தவர்களையும் பட்டியற்படுத்துக. (3 புள்ளிகள்)

3. இலங்கையை ஆட்சி செயத மன்னர்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு முஸ்லிம்கள் செய்த பணிகளை சுருக்கமாகத் தருக. (5 புள்ளிகள்)

**சைவநெறி - SAIVANERY**

"முக்தியடைவதற்கு சாதனமாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை சைவாகமங்கள் எடுத்துக் கூறுகின்றன".

1. சைவ நாற்பாதங்களையும் சுருக்கமாக விளக்குக.
2. கீழ்க்காணும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| நாற்பாதம் | மார்க்கம் | நாயன்மார் | முக்திவகை |
|---|---|---|---|
| | | | |

**வரலாறு - HISTORY**

அமெரிக்காவில் ஐரோப்பிய குடியேற்றங்கள் அமைத்தமையும் அமெரிக்கா சுதந்திரப்போர் ஏற்படுவதற்கான காரணங்களையும் நீங்கள் இதுவரையும் கற்றுள்ளீர்கள்.

இந்த அமெரிக்க சுதந்திரப்போரினூடாக புரட்சிகரமான மாற்றம் அமெரிக்காவில் ஏற்பட்டமை தொடர்பாக இன்னும் நாம் கற்போம்.

அதற்காக உங்களது பாட நூலை நன்கு வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அமெரிக்க சுதந்திரப் போரின் மகுட வாசகத்தை குறிப்பிட்டு அது அவ்வாறு உருவானதற்கான காரணத்தையும் விளக்குக.

2. பின்வரும் தலைப்புகளுக்கு சிறு குறிப்பெழுதுக.

   - பொஸ்டன் தேநீர் விருந்து
   - பிலடெல்பியா மகாநாடு
   - ஜோர்ஜ் வொசிங்டன் அவர்கள்
   - பாரிஸ் சமாதான உடன்படிக்கை

3. அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகள் நான்கைத் தருக.

**விஞ்ஞானம் - SCIENCE**

**(விஞ்ஞானம் பகுதி - 11 புத்தகத்தில் பக்கம் 61 முதல் 63 வரை)**

1. p - n சந்தியின் கோடல் என்பதால் குறிப்பிடப்படுவது யாது?
2. p - n சந்தியினூடாக எக் கோடலின் போது மின்னோட்டம் பாயும்? அதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.
3. முன்முகக் கோடல் எனப்படுவது யாது?
4. முன்முகக் கோடலினூடாக செயற்படும் உபகரணத்தின் சிறப்புப் பெயர் யாது?
5. p - n சந்தி இரு வாயியின் அமைப்பை வரைக. அதன் இயல்புகளை குறிப்பிடுக.